17

# நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்

அழகு என்றால் என்ன? இந்த ஆராய்ச்சியில் நாம் இறங்குவோமாயின், அது தத்துவ விசாரணையாகிவிடும். "அழகு என்பது புறத்தே பொருள்களிடத்துள்ள பண்பு அன்று; பொருளை நோக்குவோனது அகத்தில் உள்ள பண்பே அது" என்று தத்துவ அறிஞர் ஒருவர் கூறுகிறார். இந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டியதில்லை . எது நம் உள்ளத்தை ஈர்க்கின்றதோ, எது நம் உள்ளத்தில் இன்பக்கிளர்ச்சியை உண்டாக்குகின்றதோ, எது நம் உள்ளத்துக்கு நிறைவு தருகின்றதோ, அதுவே அழகு என்று நாம் பொதுவகையிற் கூறிவிடலாம். இந்த அழகை நாம் இயற்கைப் பொருள்களிலும் காணலாம்; செயற்கைப் பொருள்களிலும் காணலாம். இயற்கை அழகை "கைபுனைந்தியற்றாக் கவின்" என்று வியக்கின்றோம். செயற்கை அழகைப் படைத்த மனிதன் திறமையை நயக்கின்றோம். நமது அழகுணர்ச்சியைத் தூண்டும் சாதனங்கள் இயல் (இலக்கியம்), இசை, நாடகம் (ஆடல்) என்பன முதன்மையானவை. இவற்றை நாம் அழகியல் கலைகளெனப் போற்றுகின்றோம். இந்த முத்திறக் கலைகளையும் அடிப்படையாகக் கொண்டே முத்தமிழ்ப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்கள் இந்த முத்துறைக் கலைகளின் அமிசங்களையும் கொண்டவை. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்றையும் வளமுறச் செய்தவை; செய்தும் வருபவை. இவற்றைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

**(அ) இயல்** இயல் என்னும் போது இலக்கியத்தையே நாம் முக்கியமாகக் கருதுகின்றோம். ஏட்டில் எழுதப்பட்டவையே இலக்கியம் என்ற குறுகிய கருத்து ஒரு காலத்தில் நிலவியது. ஆயினும், ஏட்டில் எழுதப்படாது, மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்களும் இன்று இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையது; வாழ்க்கையில் இருந்து மலர்வது; வாழ்க்கைக்கு விளக்கம் தருவது; வாழ்க்கையை வளமாக்குவது என்று சொல்வதற்கு சாலவும் தகுதியுடையனவேயாகும். நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப்பிணைந்துள்ளன. மக்களின் எல்லாவகையான மனவுணர்ச்சிகளையும் அவை வெளியிடுகின்றன. கேட்போரிடம் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுநிலை என்னும் ஒன்பான் சுவைகளையும் உண்டாக்கவல்லன. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை எல்லாவகையான அநுபவங்களையும் அவை பொருளாகக் கொண்டுள்ளன. உண்மையிலேயே நாட்டிலக்கியம் ஈன்ற குழவியே ஏட்டிலக்கியமாகும். நாட்டிலக்கியத்தில் நாம் இயற்கை அழகைக் காண்கின்றோம். ஏட்டிலக்கியத்திற் நாம் செயற்கை அழகைக் காண்கின்றோம்.

குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். குழந்தை பிறந்ததாற் பெற்றோருக்கு மட்டும் மகிழ்ச்சி உண்டாகவில்லை. முழுச்சமூகத்துக்குமே அது மகிழ்ச்சி தரும் ஒரு நிகழ்ச்சியாகும். குழந்தை முழுச்சமூகத்துக்குமே வாழ்வளிக்க வேண்டும் என்று மருத்துவிச்சி பாடுகிறாள்:

"அயலும் புடையும் வாழ(வும்) வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ(வும்) வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ(வும்) வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ(வும்) வேண்டும்.

(தமிழண்ணல் 1966, பக்கம் 87)



இலவச விநியோகத்திற்காக

குழந்தைக்கு வாழ்த்துக் கூறுமுன்பு - குழந்தையின் பெற்றோருக்கு வாழ்த்துக்கூறுமுன்பு - அயலும் புடையுமாகிய சமூகத்துக்கு வாழ்த்துக் கூறும் இந்தப் பெயரறியாத மருத்துவிச்சியின் உள்ளத்தின் அழகை நாம் இப்பாடலிற் காண்கின்றோம். இது போலவே வயலில் வேலை செய்யும் தொழிலாளி. முதல் உழவு செய்யத் தொடங்கும்போது இறைவனுக்கு வணக்கம் செலுத்தும் பாடலும் எம் இதயத்திற்கு இனிக்கின்றது.

பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
வேளாண்மை விளையவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்ல மழைபெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லாரும் வாழவேணும் தம்பிரானே

(இராமலிங்கம் 1961 பக்கம் 37)

பட்டி பெருகுவதாலும் பாற்பானை பொங்குவதாலும் வேளாண்மை விளைவதாலும் உழவனும் அவனது குடும்பமும் மட்டும் உண்டு மகிழப்போவதில்லை. அவன் செய்யும் தொழிலால் நாட்டிலுள்ள எல்லோரும் நல்வாழ்வு பெறுகின்றனர். எல்லோரும் வாழவேண்டும். என்று இறைவனிடம் இரந்து வேண்டும் இந்த ஏழைத் தொழிலாளியிடம்,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன்நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

(தேவாரம், 3ஆம் திருமுறை)

என்று பாடிய திருஞானசம்பந்தரின் மனப்பான்மை இருப்பதைக்கண்டு நாம் வியக்கின்றோம் அன்றியும்,

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

(பராபரக்கண்ணி, 321)

என்று பாடிய தாயுமானவரின் உள்ளத்தையும் நாம் இந்த உழவுத்தொழிலாளியிடம் காண்கின்றோம்.

இனி, தன் இன்பக் குழவியின் இனிய முகத்தைக் கண்டு உள்ளம் உருகிப் பாடும் தாயின் தாலாட்டுப் பாடல்களிலே ஓசையும் பொருளும் ஒத்து இனிக்கும் அருமையான கவிதைகளைக் காண்கின்றோம். தன் குழந்தை கிடைத்தற்கரிய செல்வம் என்றெண்ணும் தாயொருத்தி.

"ஆண்பனையின் நுங்கே அணில் கோதா மாம்பழமே"

(தமிழண்ணல் 1966, பக்கம் 74)



இலவச விநியோகத்திற்காக

என்று இயல்பாகவே பாடிவிடுகின்றாள். நுங்கும் மாம்பழமும் நாட்டுச் சூழலிலே அவள் கண்டும் உண்டும் அநுபவித்த பொருள்கள். ஆனால், பெண்பனைதான் காய்ப்பது; ஆண்பனை காய்ப்பதில்லை இது அந்தத் தாய்க்குத் தெரியாததன்று. ஆண்பனை காய்த்தால் அது ஓர் அற்புதமேயாகும். தன் குழந்தையும் ஓர் அற்புதப் பொருள் என்ற கருத்தை அவள் எவ்வளவு சுவையாக எவ்வளவு இயல்பாக எடுத்துக் கூறிவிடுகிறாள்! ஏட்டுக்கவிதையிற் காணமுடியாத புதுமை வாய்ந்த கற்பனைகள் நாம் நாட்டுக்கவிதையிற் காண்கின்றோம்.

கொவ்வை இதழ் மகனே-என்
குவிந்த நவரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே-என்
கண்மணியே நீயுறங்காய்

(தமிழண்ணல் 1966, பக்கம் 76)

ஒரு தாயின் உள்ளத்திற் பொங்கும் உணர்ச்சிகளை நாம் இப்பாட்டிலே காண்கின்றோம். குழந்தையின் சிவந்த இதழ் அவளுக்குக் கொவ்வைக் கனியை நினைவூட்டுகின்றது. அது அவள் இயற்கைச் சூழலிற் கண்டறிந்த ஒரு பொருளேயாகும். பெண்ணின் இயல்பால் நவரத்தினங்களிலும் பசும் பொன்னிலும் அவளுக்கு அளவு கடந்த ஆசை இருக்கின்றது. ஆயினும் அவள் தன் ஆசைப் பொருள்களாகிய நவரத்தினக் குவியலையும் கட்டிப்பொன்னையும் தன் இன்பக் குழந்தையிடமே கண்டு பூரிப்படைகின்றாள். இத்தகைய தாலாட்டை நாம் ஏட்டிலக்கியத்திலும் காண்கின்றோம். இங்கே ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

மன்னு புகழ்க் கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னி நன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ.

(பெருமாள் திருமொழி 8:1)

நாட்டுத்தாயின் பாடலோ, குலசேகரப் பெருமானின் பாடலோ, எது கவிதைத் தரத்தில் விஞ்சியது என்று சொல்வது எளிதன்று.எனினும் நாட்டுத்தாயின் பாட்டில் உண்மையான உணர்ச்சி பெருகி வருவதை, நம் இதயம் உணருகின்றது.

இனி நாட்டார் பாடலில் வரும் நீதியுணர்ச்சிக்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

ஓதிப்படிச்சி
ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச்செய்த தீங்கை - அல்லா
எள்ளளவும் ஏற்கமாட்டான்.

(வித்தியானந்தன் 1967 பக்கம் 27)

ஒருவர் குர்ஆனை ஓதலாம்; வேறு பல நூல்களையும் படிக்கலாம். ஊர் புகழப் பேரோடும் மதிப்போடும் வாழலாம். அவர் ஏழை ஒருவனுக்கு ஒரு தீங்கைச் செய்துவிட்டு அதை மூடி மறைக்கப்பார்க்கலாம். அவருடைய செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் கட்டுப்பட்டவர்கள் அவரது செயலை ஏற்றுக் கொள்ளவும் கூடும். ஆனால், எல்லாம் அறியும் அல்லாஹ் எள்ளளவுமே ஏற்றுக்கொள்ளமாட்டான். இது நமது நாட்டுப் புறத்தில் வாழும் முஸ்லிம் ஒருவரின் நம்பிக்கை.

இந்தப் பாட்டின் எளிய சந்தமும் மொழி நடையும் மட்டுமல்லாமல், இதன் பொருளும் எம்மைக் கவர்கின்றது. இவ்வாறே நாட்டுப் பாடல்களில் இலக்கியப்பண்பு மிகுந்திருப்பதைக் காணலாம்.

**உவமை :** நாட்டார் பாடல்களிற் சிக்கலான அணிகள் இரா. ஆனால் உவமை உருவகங்கள் மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் இயல்பாகவும் கையாளப்படும். இந்த உவமைகள் ஏட்டுக் கவிதைகளில் புலவர்கள் பொதுவாகக் கையாளும் உவமைகளிலும் பார்க்கச் சுவையுடையனவாயும் இருக்கும். இங்கே சில உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒரு பெண்ணுக்கு மணப்பேச்சு நடைபெறுகின்றது; அந்த ஆண் எப்படியானவன் என்று அவள் தோழியிடம் விசாரிக்கின்றாள். தோழி அந்த மாப்பிள்ளையை நையாண்டி பண்ணும் போக்கிலே வருணிக்கின்றாள். நகைச்சுவையோடு பொருந்திய, இயற்கையான, புதுமையான உவமையைக் கையாளுகிறாள்.

கச்சான் அடித்தபின்பு காட்டில் மரம் நின்றதுபோல்.
உச்சியில் நாலு மயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை.

(வித்தியானந்தன் 1962, பக்கம் 59)

கச்சான் காற்றின் உக்கிரம் நாட்டுப்புற மக்களுக்கு நன்கு தெரிந்ததே, அக்காற்றுச் சுழற்றியடித்து ஓய்ந்தபின் காட்டுமரம் எப்படியிருக்கும் என்பதை நாம் அகக்கண்ணாற் பார்க்கலாம். மரத்தின் இலைகள், பூக்கள், காய்கள் எல்லாம் உதிர்ந்து போக, இரண்டொரு கிளைகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. ஓரமெல்லாம் வழுக்கை விழுந்து உச்சியிலே நாலு மயிர் (சிறிதளவு மயிர்) மாத்திரம் உள்ள மாப்பிள்ளைக்குக் கச்சான் காற்றினால் அலைக்கப்பட்ட காட்டு மரத்தை உவமித்திருப்பது எத்துணைச் சுவையுடையது.

காதல் கைகூடாமையால் ஒருவர் வாடியிருக்கிறார். அவருடைய வாட்டத்தைப் பார்த்து மற்றொருவர் வினாவுகிறார். கவிதையிலே இயற்கையான உவமைகள் மிகவும் பொருத்தமாக வருகின்றன.

மாவிலங்கம் பட்டைபோல மானிறைச்சித் துண்டுபோல
ஈச்சம் குருத்துப்போல இருந்துமுகம் வாடலாமா.

(வித்தியானந்தன் 1964, பக்கம் 30)

மாவிலங்க மரத்தின் பட்டையையும் மானிறைச்சியையும் ஈச்சம குருத்தையும் நாட்டு மக்கள் வெயிலிலே காயவைத்து வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். இந்த இயற்கையான நிகழ்ச்சியையே நாட்டுப்புறக் கவிஞன் உவமையாகக் காட்டுகிறான்.

நரைத்த கிழவன் ஒருவனுக்கு இளம் பெண்ணொருத்தியை மணஞ்செய்து கொடுக்கப் பெற்றோர் எண்ணுகின்றனர். அந்த இளம் பெண்ணுக்காக அவளது தோழி இரங்குகின்றாள். அவள் தனது வெறுப்பை வெளிப்படுத்த இயற்கையான உவமைகளைக் கையாளுகின்றாள்:

நாணற் பூப்போல நரைத்த கிழவனுக்கு
கும்மாளம் பூப்போல - இந்தக் குமர்தானோ வாழுறது

(வித்தியானந்தன் 1962, பக்கம் 60)



இலவச விநியோகத்திற்காக

கிழவனின் நரையை விளக்குவதற்கு நாணற்பூவையும் பெண்ணின் இளமையழகை விளக்குவதற்குக் கும்மாளம் பூவையும் உவமை கூறியிருப்பது மிகவும் பொருத்தமானது. இயற்கையிலே இப்பூக்களைக்கண்டு பழகியவர்களுக்கு இவற்றின் பொருத்தம் இனிது விளங்கும்.

தன் காதலியின் பொன் போன்ற மேனி அழகிலும் பூரித்த மார்பின் அழகிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த ஒருவன் உணர்ச்சியை இயற்கையான உவமைகள் மூலம் தன் காதலிக்கே சொல்லிக் காட்டுகின்றான்.

> தேசிப் பழத்தழகி தேங்காய் முலையழகி
> பாசிப் பழத்தழகி பக்கத்தில் நான் வந்திடுவேன்
>
> (வித்தியானந்தன் 1964, பக்கம் 28)

இவ்வாறே நாட்டார் பாடல்களில் வரும் உவமைகள் இயற்கைப் பண்பும் புதுமையும் பொருத்தமும் உடையனவாய் இருக்கக் காணலாம். ஏட்டுக் கவிதைகளில் மரபுமுறையாகப் புலவர்கள் கையாளும் உவமைகள் பொதுவாகக் கவர்ச்சியும் சுவையும் இழந்து விடுகின்றன. ஆனால், இத்தகைய வரட்சி நாட்டார் பாடல்களில் இல்லாதிருப்பதால் அவை இனிய கவிதைகளாக எமதுள்ளத்தை ஈர்க்கின்றன.

**(ஆ) இசை:** நாட்டார் பாடல்களுக்குத் தனிச்சிறப்பைத் தருவது அவற்றின் இசையின்பமே எனலாம். இசை என்னும் சிறகு இருப்பதாலே இப்பாடல்கள் அவை தோன்றும் வட்டார எல்லைகளைக் கடந்து விரைவிலே நாடெங்கும் பரவிவிடுகின்றன. இலட்சக்கணக்கான நாட்டு மக்கள் இந்த இசையையே நயந்து இன்புறுகின்றனர். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருப்பதோடு சொற்சுவையும் பொருளழகும் பொருந்தியிருப்பதால் நாட்டின் கலாசார பாரம்பரியச் செல்வமாகத் திகழ்கின்றன. நாட்டுப்பாடல்கள் பெரும்பாலும் பொழுதுபோக்கிற்காகவும் உழைப்பாளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவும் பாடப்படுவன. மக்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் புரியும் போது பாடும் பாடல்களின் இசை, அவர்களின் உளச்சோர்வையும் உடற்சோர்வையும் போக்கி தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு உதவிபுரிகின்றது. தொழிலாளர்கள் பாடலின் ஒத்திசைக்கு ஏற்பத் தம் உடலை இயக்கி ஒருங்கிசைந்து வேலை செய்வதால், வினைத்திறமை மிகுகின்றது. ஓடம் செலுத்துவோர் பாடல் வலையிழுப்போர் பாடல், நெல்லுக்குத்தும் பெண்களின் பாடல், ஏற்றம் இறைப்போர் பாடல் என்பவற்றிலே இதற்கு உதாரணம் காணலாம். இத்தகைய பாடல்களில், பொருளற்ற "ஏலேலோ ஐலசா" என்பது போன்ற சொற்கள் ஒத்திசைச் சத்தத்தை எழுப்புவதற்காக உபயோகப்படுகின்றன. இவ்வாறே தாலாட்டுப்பாடும் தாய்மார் "ஆராரோ ஆரிவரோ" என்று சந்தம் அமைத்துப் பாடுகின்றனர். முன்னைய சந்தம் உடலில் முறுக்கேற்றித் தொழில் செய்வதில் உற்சாகத்தைத் தூண்ட, பின்னைய சந்தம் குழந்தையின் உடல் முயற்சிகளை ஒடுக்கி உறங்கச்செய்து விடுகின்றது.

நாட்டுப்பாடல்களின் நயமான இசை, எமது ஏட்டிலக்கியத்தில் இயற்றமிழ் செய்யுள்களைப் படிப்படியாக இழைவும் குழைவும் உடையனவாக்கியுள்ளன. இயற்றமிழ்ச் செய்யுள் வரலாற்றை நோக்கினால், சங்ககால முதல் இன்றுவரையும் இச்செய்யுள்கள் இசையை மென்மேலும் கூடுதலாக ஏற்று இனிமை பெற்றுள்ளதைக் காணலாம். பரிபாடல்கள்,பக்திப்பாடல்கள், பெருங்காப்பியங்கள், சித்தர் பாடல்கள், பள்ளு, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியப்பாடல்கள், பாரதியார் பாடல்கள், இக்காலக் கவிஞர்களின் பாடல்கள் ஆகியவற்றில் இசை எவ்வளவு கலந்துள்ளது என்பதை நோக்கினால் இவ்வுண்மை இனிது புலனாகும். இயற்றமிழ்க் கவிதைகள் படிப்படியாக இசை தழுவிய பாடல்களாக மாறியமைக்கு நாட்டுப்பாடல்களின் நெஞ்சையள்ளும் இசையே காரணமாகும்.



இலவச விநியோகத்திற்காக

இனி நாட்டுப் பாடல்களின் இசை, நமது சாஸ்திரீய சங்கீத அமைப்பாளர்களையும் கவர்ந்திருக்கிறது. சங்கீத மேதைகளான தியாகராஜரும் கோபால கிருஷ்ண பாரதியாரும் சில நாட்டுப்பாடல்களிலே தங்கள் சாகித்தியங்களைச் சேர்த்து அவற்றுக்கு அழியா வாழ்வு அளித்துள்ளனர்.

**(இ) நாடகம்.(ஆடல்):** முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தமிழ் முக்கியமாக ஆடற்கலையையே பொருளாகக் கொண்டது. இக்கலைக்கும் நாட்டு மக்களின் ஆடல் பாடல்களே தோற்றுவாயாக அமைதிருக்க வேண்டும்.நாட்டுப்பாடல்களில் பல கூட்டாகப் பாடுவதற்கென்றே அமைந்தவை; கும்மி, கோலாட்டம் போன்ற விளையாட்டுப்பாடல்களும் வசந்தன் போன்ற கொண்டாட்டப் பாடல்களும் ஆடலை முக்கியமான அமிசமாகக் கொண்டவை. உதாரணமாகக் கும்மிப் பாடல்களில் வரும்.

தன்னானே நாதினம் தன்னானே - தன
தன்னன நாதினம் தன்னானே

என்பது போன்ற தருக்களும் கோலாட்டப்பாடலிலே வரும்.

தினதந்தினா தினதந்தினா
தினதந்தினா தினனா
தினதந்தினா தினனா
தின்னாதி னாதந்தினா
தினதந்தினா தினனா

என்பது போன்ற தருக்களும் வசந்தன் பாடல்களிலே வரும்.

தாந்தி மிக்க திமிக்க திமிக்கத்
தந்திமி தொங்கத் தாவென்னா

(சதாசிவ ஐயர் 1940, பக்கம் 22)

என்பது போன்ற தருக்களும் நாட்டுப்பாடல்களில் உள்ள ஆடற்கலை அமிசங்களை எடுத்துக் காட்டும். நாட்டுமக்களிடம் எத்தனையோ வகையான ஆடல்கள் (Folk Dances) உள்ளன. அவற்றோடு தொடர்புடைய பாடல்களும் உள்ளன. இத்தகைய நாட்டுக் கூத்துக்களும் நமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகவே மதிக்கப்படுகின்றன. இன்று பாடசாலை நடன நிகழ்ச்சிகளிலும் பரதநாட்டியக் கச்சேரிகளிலும் திரைப்படங்களிலும் சிலபல நாட்டுக் கூத்துகள் இடம்பெற்று வருவதைக் காண்கின்றோம். இயல், இசைத் துறைகளிற் போலவே நாடகத் துறையிலும் நாட்டார் இலக்கியம் புத்துயிரும் புது வளமும் ஊட்டி, நமது கலைச்செல்வத்தைச் செழிப்புறச் செய்கிறது.



இலவச விநியோகத்திற்காக